தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உகூ | திருவள்ளுவர் யாண்டு ௲கூஅசு விசய—ஐப்பசி 1953—அக்டோபர் | மலர் எ

இருவரிழப்பு.

தமிழ் நாடும் தமிழ் மக்களும் இரு பெரியார்களைக் கடந்த சிலதிங்களில் இழக்கவேண்டியதாயிற்று. மாய்தலும் பிறத்தலும் உலகியற்கை யாயினும், மாசறக் கற்ற மாண்புடையோரை இழத்தற்கு மனம் வரவில்லை. என் செய்வது? “எல்லா நூலுள்ளும் நல்லனவற்றை எடுத்து யாவர்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கியல்பு” என்று பரிமேலழகர் திருவள்ளுவரைக் கூறுவர். நம் கண்ணெதிரில் திருவள்ளுவர் போலவே வாழ்ந்த ஒரு பெரியாரைக் கண்டு கொண்டிருந்தோம். ஆனால் இன்றிழந்தோம். அவர் யார்? அவர்தான் தனக்கென் வாழாப் பிறர்க்குரியாராகிய திரு. வி. கலியாண சுந்தரனாராவர். சமயப் பெரியோர் கருத்துக்களாயினும், அரசியல் தலைவரின் அரிய எண்ணங்களாயினும், சீர்திருத்தக்காரரின் சிந்தனைகளாயினும் அவற்றையெல்லாம் ஒப்ப நாடி நல்லன கொண்டு அல்லன தள்ளி தன்னுடைய பேச்சாலும், எழுத்தாலும் புதுவழி காட்டிய புலவராவார். அரசியலரங்கில் நம் மருந்தமிழ் பேசவோ, உரையாடவோ தகுதியில்லாதது என்ற கொள்கை இந்நாட்டில் தோன்றியவர்களுக்கும் ஏற்பட்டிருந்தது. அதிலும் நாட்டுப் பற்றுக்கொண்டு அந்நிய ஆட்சியை அகற்றி நல்லதோர் அரசை அமைக்கவேண்டுமென்று எண்ணிய மிகப் பெரியவர்கட்கும் இக் கருத்து அக்காலத்தில் இருந்தது. நம் நாட்டு மொழியால் அரசியல் போன்ற எல்லாவற்றையும் செவ்வனம் நிகழ்த்த இயலும் என்னும் எண்ணம் அக்கால அரசியல் தலைவர்கட்கில்லை. அவர்கள்மீதும் குறையில்லை. அவர்களெல்லாம் ஆங்கிலம்மட்டும் பயின்றவர். எந்த அளவுக்கு ஆங்கிலப் புலமை யுண்டோ அந்த

அளவுக்குத் தமிழை அறியாதவர். அக்காலத் தமிழறிஞரும் அரசியலில் நாட்டங் கொள்ளவில்லை. அவர்கள் வாழ்வு உயிருள்ளதாயில்லை.

இந் நிலையில் திரு. வி. க. அவர்கள் அரசியலரங்கில் தோன்றினர். தமிழ் நாட்டில் சேரனும், சோழனும் பாண்டியனும் அரசமைத்தது எப்போது? இவ் வினவுக்கு விடை காண்டல் முடியாது. இன்று எவற்றையெல்லாம் பழமைக்குச் சான்றாகச் சொல்லுகின்றோமோ, அவற்றி லெல்லாம் இந்த மூவரின் அரசியல்பற்றிய குறிப்புக்களைக் காணுகின்றோம். அக்காலத்தில் பிற நாடுகளில் இருந்த எந்த அரசியலுக்கும் தமிழன் அரசியல் குறைவாயில்லை. ஆனால், சிறப்பாக இருந்தது. அத்தகைய அரசியலை ஆக்கி யது எது? தமிழ்தானே! இவ்வாறு பண்டு தொட்டுஅரசி யல் துறையில் அரசோச்சிய நம் மருத்தமிழ் இன்றைய அரசியலுக்கு ஆகாமற் போவதெவ்வாறு? இது போன்ற அழுத்தமான எண்ணத்தின் உறுதியால் ஆங்கிலமறிந்த வராயிருந்தாலும், சொற்பொழிவெல்லாம் தமிழிலேயே ஆற்றினர். அவருடைய பேச்சும், எழுத்தும் அவருக் கென்று அமைத்த தனிச்சிறப்பாயின. கொச்சைத் தமிழில் பேசும் பழக்கம் அவரிடம் இல்லை. நல்ல தமிழில் அழகாக, விரைவாக, உணர்ச்சியாகப் பேசும் திறம் அவருக்கியல்பா யமைந்தது. அடிமை வெம்மையால் அவதியுற்ற மக்கட்குத் திரு. வி. க. வின் உரை தமிழ்த் தென்றலாக வீசி உரிமை உணர்ச்சியை ஊட்டிற்று. நல்ல பல நூற்களை எழுதி யுள்ளார். பெண்ணினத்தின் பெருமையை உணர்த்தினர். எளிய உணவு, எளிய உடை, எளிய வாழ்வு இம் மூன்றும் அவருடைய வாழ்வுக் காலத்தில் மாறியதே யில்லை. 'இத் தகைய பெறலரும் பண்பு வாய்ந்த பெரியோரை நாடிழந்து விட்டது. ஆனால் அவருடைய எண்ணங்களும், புகழும் நாட்டை விட்டு என்றும் மறையாது. வாழ்வின் பல துறை களிலும் முன்னேற வேண்டுமென்னும் எண்ணங் கொண் டுள்ள நம் தமிழகத்து அவருடைய சிறந்த எண்ணங்களும், பண்புகளும் தக்க வழிகாட்டிகளாக அமையுமாக.

திரு. வி. கவை இழந்து திடுக்குற்ற தமிழகத்துக்குப் பண்டிதமணியவர்களின் இழப்பு மிக்க துயரத்தை நல்கியது. பல்லாண்ட கேள்விப்பயனுடையாராகிய பண்டிதமணி போன்றாரின் பிரிவால், நாம் ஒருண்மையை நினைவு கூரவேண்டியவர்களாக வுள்ளோம். படிப்பும் பண்பும் அமைந்த பெரியவர்கள் நெடுங்காலம் ஏனையர் போல வாழார். அவர்கள் உள்ளபோதே அவர்களால் நாடும், மக்களும் அடைய வேண்டிய நற்பயன்களை யெல்லாம் அடைய முயற்சி செய்ய வேண்டுமென்பதாகும். இழந்தபிறகு புலம்புவதில் பயனில்லை நிற்க.

பண்டிதமணியவர்கள் தமிழிலும், வடமொழியிலும், முதுபெரும் புலவராவார். அவருக்கு புலமை அமைந்தது போலவே, அதனைக் கற்றாரவையில் யாவரும் மனங்கொள விரித்துரைக்கும் சொல்லாற்றலும், சிறந்த தமிழில் நல்ல உரைநடை எழுதும் வண்மையும் ஒருங்கே அமைந்திருந்தன. நல்ல புலமை யுடையவர்களும், கேட்பார் மனங்கொள்ளும் வண்ணம் எடுத்துரைக்கும் ஆற்றலும் எழுதும் ஆற்றலும் அற்று விளங்குகின்றனர். இன்னுஞ் சில பெரும் புலவர்கள் எழுதுகின்றார்கள். பேசுகின்றார்கள். ஆனால் எழுத்தில் தெளிவில்லை. பேச்சில் கவர்ச்சியில்லை. இவ்வாறு விளங்கும் அறிஞர் குழுவில் பண்டிதமணியவர்கள், அறிதல் சொல்லுதல், எழுதுதல் என்னுப் மூவகை யாற்றலும் ஒப்பின்றிப் பெற்று மணி போன்றே விளங்கினர்.

பெரும் புலமையுடையவர்களிடத்தில் சில சிறப்புக்கள் விஞ்சியிருக்கும். பண்டிதமணியவர்களிடம் இத்தகைய சிறப்புக்கள் பல இருந்தன. நூலாசிரியரின் உள்ளக் கருத்தை அறிந்து விளக்குவதில் அவருக்கொப்பாவார் இல்லையெனலாம். பண்டைய பாக்களில் ஆசிரியர்கள் ஆண்டுள்ள உவமைகளாலும், அடைமொழிகளாலும் சிறந்த பல கருத்துக்களை எடுத்துக் கட்டுரை மூலமாகவும் சொற்பொழிவு மூலமாகவும் விளக்கி வந்துள்ளார்கள்,

இவ்வாறு ஆசிரியரின் உள்ளக்கருத்தை உணர்ந்து எழுதுவதும், சொல்லுவதும் தான் புலமையின் பயனாகும். பண்டைய ஆசிரியர்களின் உள்ளக்கருத்தில் தோய்ந்து எழுதும் வன்மையே, தான் கூறுகின்ற கருத்தையும் சிறக்க எழுத உதவும். இந்த உண்மையை நன்குணர்ந்து அதன் வண்ணம் நின்று பண்டிதமணியவர்கள் பெரும் புகழடைந்தார்.

பெரும் புலமை யுடையவர்கள் என்று அறிஞர்களால் மதிக்கப்பெற்ற யாவரும் சிறு நூல், பெருநூல் என்று கருதாமலும் எல்லா நூல்களையும் ஐயந்திரிபற ஆசிரியர் உள்ளத்தோடொன்றிப் பயின்றோரேயாவர்.

இன்றைய நிலையில் தமிழைப் படிப்போரும் படித்ததாக நினைப்போரும் அவ்வாறு பயிலுவதில்லை. நூலாசிரியர் யார் என்று துலையிட்டுக் கருதித் தம் கருத்தோடு ஒத்தாலன்றிப் பயிலுவதில்லை. எனவே, சிறந்த புலமை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. சொல்லுணர்ச்சி கருதி எழுந்த நூல்களைப் பயின்ற கருத்து வளர்ச்சியின்றித் தமிழகம் பின்னேறுகிறது. இனியாவது பண்டிதமணி யவர்களின் நெறியில் தமிழ்ப் படிப்போர் யாவரும் சென்று பண்டையாசிரியர்கள் சொற்களைப் பொருளோடொன்றி ஆய்ந்து அணுகிப் பயின்று சிறந்த புலமை எய்துவார்களாக. இன்றேல் திரு. வி. க. பண்டிதமணிபோன்ற பெரும்புலவர்கள் தோன்றுதற்கு வாய்ப்பில்லாது தமிழ்மொழி வளங்குறையும். அக்குறைபாடு ஏற்படா வண்ணம் தமிழ் மாணவர்கள் யாவரும் நன்கு பயின்று தமிழ்த் தாயை அரியணையேற்றிப் பேறடைவார்களாக.

புல்லாங் குழல்.

(வித்துவான் சி. கோவிந்தராசன். விரிவுரையாளர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, கரந்தை.)

இசையென்பது மென்மையும் இனிமையும் ஒப்பவாய்ந்த ஒலியாகும். வண்டின் சிறகொலி, குயிலின் குரல் கிளியின் பேச்சு, யானையின் பேரொலி, அருவியின் இன்னோசை இவைகளே ஆதி மனிதனின் மனத்தைக் கவர்ந்த இயற்கை இசைகளாகும்.

விலங்கொத்திருந்த மனிதன் இயற்கையில் இவ்வாறு இன்னிசையைக் கேட்டு இன்பங் கண்டதோடு நில்லாமல் அவ்வொலிகளை வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளினின்றும் அறிவானாயினன்.

மனித வாழ்க்கையோடு ஒன்றி உயர்ந்தோங்கி வந்த இசைக்கருவிகள் பலதிறப்பட்டு விளங்கின. பண்டைய இசை வல்லுநர் அவைகளைத் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி என ஐந்து வகையாகப் பிரித்துக் கூறுவர்.

குழல் என்னும் துளைக்கருவியே மற்றைய இசைக்கருவிகளுக்கெல்லாம் முதன்மை யுடையதாகத் தெரிகின்றது. கடைச்சங்க காலத்திருந்த வள்ளுவனாரும் "குழலினிது யாழினி தென்பதம் மக்கள்—மழலைச்சொற் கேளா தவர்." என்று குழலை முதற்கண் வைத்துச் சிறப்பிக்கின்றார்.

இம் முறையிலேயே இளங்கோவடிகளும், சிலம்பில் அரங்கேற்றுக் காதையின்கண்,

"குழல்வழி நின்றது யாழே யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்

பின்வழி நின்றது முழவே முழவொடு
கூடிநின் றிசைத்த தாமந் திரிகை"

என்று, இசையின் ஒப்புமை நோக்கிக் குயிலுவக் கருவி களாகத் தொகுத்துரைக்கப்பெற்ற இசைக் கருவிகளுள் குழலுக்கு இசையின் இனிமை கருதி முதலிடங் கொடுப்பா ராயினர்.

குழல் தோன்றிய வியத்தகு வரலாற்றினையறிய பல்லா யிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னே அறிவைச் செலுத்த வேண்டியுளது. மனிதன் விலங்கொத்து வாழ்ந்தபோது, தனது பசிக்கு விலங்குகளைக் கற்கருவிகளாற் கொன்று அவற் றைப் பச்சையாகவே உண்டு வந்தான். ஒருநாள், அவன் கடித்துச் சுவைத்த விலங்கின் இடையெலும் பொன்றின் துளையினுள் பொருந்தியிருந்த ஊன் கருதி உருஞ்சியவன் ஊதிவிட்டான். அச் செய்கையால் அவன் ஊனினைப் பெருனுயினும் ஓசையினைப் பெற்றான். அதுவே துளையினுள் வெப்பமான வாய்க்காற்று ஊதப்படும் பொழுது எழுந்த முத லோசையாகும். அவ் வோசையைச் செவிமடுத்து வியந்த மனிதக் கூட்டத்தினர் அம் மனிதனைப் பன்முறையும் ஊதச் செய்து, கேட்டு இன்புற்றனரெனலாம்.

எண்ணிறந்த ஆண்டுகள் எழுந்தோடி மறைந்தன. மனிதன் தன் தேவைக்கேற்ப அறிவுப் பாதையில் முன்னேறி வருகிறான்.

கோடைகாலம். வெய்யோன் தன்னுடைய வேட்கை யைத் தீர்த்துக் கொள்ளுதலைப் போன்று விளங்குகிறான். வேட்டைக்குச் சென்று அலைந்து திரிந்து களைத்த வொருவன் ஓய்ந்தொரு மரநிழலில் அமர்ந்தான். அவனுடைய களைப் புற்ற கண்களுக்கு எதிராக திரண்ட சிறு பொருளொன்று காய்ந்து கிடக்கின்றது. அஃதொரு பழத்தின் ஓடுபோலும்! அதன் காம்பிருந்த பகுதியின் வழியாக உள்ளீடு கருதிய சிற்றுயிர்களால் துளைக்கப்பட்டிருந்தது. அப்பொழுது வெய்

யோனின் வெப்பமுடன் கலந்த காற்று வீசத்தொடங்கியது. அக்காற்று அத்திரண்ட குண்டிகையின் சிறு புழை வழியாகச்சென்று மீளும்போது இனிய ஓசையொன்று பிறந்தது. களித்திருந்தவன் கண்டான். முதலில் அச்சங்கொண்டான். ஆயினும், எலும்பின் துளை வழியே இன்னோசை கண்ட அனுபவத்தால் அதனையும் இசை மிழற்றற்கு இலக்காக்கு வாளுயினன். இக் கருத்தினை,

"பொரியரை விளவின் புன்புற விளைபுழ
லழலெறி கோடை தூங்கலிற் கோவலர்
குழலென நினையும்"

என்னும் அகநானூற்றுச் செய்யுளின் அடிகளினால் உய்த்துணர்தற் பாற்று.

உலோகத்தின் பயனை நன்கு மனிதன் அறிந்திருந்த காலம். மலையும் வெளியுமல்லாத புதர்களும் புற்களும் நிறைந்த இடைப்பட்ட நிலங்களில், தங்களுடைய மூலப் பொருளாகக் கருதப்பட்ட கால் நடைகளின் மேய்ச்சலுக்காக மக்கட் கூட்டத்தினரில் சிலர் வாழ்ந்து வந்தனர். அதனால் அவர்களை மற்றைய கூட்டத்தினர் "இடையர்" என்று அழைத்தனர்.

ஒருநாள் காலை அவர்களுள் சிலர், தங்களுக்குக் களிப்பை உண்டாக்கும் தேனினைக் கருதி மலைச் சாரலுக்குச் சென்றார்கள். வேண்டிய அளவு தேன் கிடைத்ததும் சேரிக்குத் திரும்பினார்கள். அப்பொழுது கதிரவன் மலைப்பக்கம் சாய்ந்து வந்தான். வழியெல்லாம் மூங்கிற் புதர்களே மிகுதியாகக் காணப்பட்டன. அப்பொழுது எங்கிருந்தோ இன்னோசையொன்று இடைவிடாது ஒலித்துக்கொண்டிருந்தது. அவ்வோசை அவர்களுடைய உள்ளங்களைக் கவர்ந்தது. எனவே அவர்கள் ஓசை யெழும் இடத்தினை ஆராயத் தொடங்கினார்கள். விளைந்த மூங்கிலொன்றில் வண்டு துளைகளிட்டிருந்தது. அத்துளைகளின் வழியாகப் பகலெல்லாம் வீசிய வெம்

மையுடன் கலந்த காற்று நுழைந்து வெளியேறும்போது, காற்றின் வேகத்திற் கேற்ப இனிய ஓசைகள் எழுவதை ஒருவன் கண்டு கூக்குரலிட்டான். யாவரும் கூடி அதனைக் கண்டு களித்தனர். ஒருவன் அம் மூங்கிலைத் துளைகள் பொருந்தியுள்ள அளவினதாகத் தனது தாமிரக் கோடரியால் வெட்டி எடுத்துக்கொண்டான். அத்துளைகளுள் ஒன்றின் வழியாகத் தனது வாயினுல் ஊதிப்பார்த்தான். அப்பொழுது எழுந்தது இனியதொருவோசை. அதுவே குழலின் முதல் வடிவமும் இயக்கமுமாகும். இக் கருத்தினை

"ஆடமை குயின்ற அவிர்துளை மருங்கிற்
கோடை யவ்வழி குழலிசை யாக"
"புதலிவ ராடமைத் தும்பி குயின்ற
வகலா வந்துளை கோடை முகத்தலின்
ஆய்க்குழற் பாணியி னேதுவந் திசைக்கும்"

என்னும் (82, 225) அகநானூற்றடிகளினுலும்,

"தும்பிவாய் துளைக்கப்பட்ட கீசகம் வாயுத்தன்னுல்
வம்பவாய் குழலி னேங்க"

என்னும், "சூளாமணி" அடிகளினுலும் உய்த்துணரலாம்.

மூங்கிற் குழல்களில் முறையாக வண்டுகள் துளைத்துள்ளவற்றை அரியதாகக் கண்ட சிலர், முயன்று தீக்கடைக் கோலால் துளைசெய்து ஊதி மகிழ்வாராயினர்.

சிலர், இரண்டு நீண்ட வடிவமுடைய கொன்றைப் பழங்களைக் கொண்டுவந்து உள்ளிருக்கும் விதைகளை நீக்கிவிட்டு, துளையிட்டுக் குழலாகப் பயன் படுத்தினர். இதனையே,

"ஒழுகிய கொன்றைத் தீங்குழல் முரற்சியர்"

என்னும் முல்லைக்கலியி லுள்ள தொடர் விளக்குகின்றது.

பின்னர், மக்களுடைய அறிவிற்கேற்ப குழல் பல வடிவில் தோன்றலாயிற்று. முல்லைக் கொடியால் முப்பிரியாகப் பின்னிய வளையை மூங்கிற் குழலின் ஒருபுற வாயில் செருங்க

வைத்து ஊதப்பெற்றதே "முல்லைக் குழல்" என்று வழங்கப் பட்டது. ஆம்பல் மலர்போன்ற அணைசு (பூண்) செய்து ஒருபுறம் இணைக்கப்பட்ட குழல் "ஆம்பற் குழல்" என்று குறிப்பிடப்பட்டது. இம் மூன்று குழல்களையும் இளங்கோ வடிகள், ஆய்ச்சியர் குரவையின்கண் அழகுற அமைத் துள்ளார்

மற்ற இசைக் கருவிகளைக் காட்டிலும் குழல் மிகவும் எளிய முறையிலேயே அமைத்துக் கொள்ளுதற்குரியது. இனிய இசையை திறம் பெற்ற பண்ணோடு நெடுந்தூரம் கேட்டற்குரிய முறையில் வெளிப்படுத்த வல்லது.

புறத்தில் வைரமுள்ள பனை, கமுகு, மூங்கில் முதலிய வற்றைப் புல்லென்று கூறுதல் மரபாகும். மூங்கில் புல்லின் வகையைச் சேர்ந்த தாகலின், அதனால் உருவாக்கப்பெற்ற குழல் புல்லாங் குழலெனப் பெயர் பெறுவதாயிற்று. வேய்ங் குழல், வங்கியம் என்பனவும் இக் காரணம் பற்றியே எழுந்த பெயர்களாம்.

குழலின் அமைப்பினை, அடியார்க்கு நல்லார், அரங் கேற்றுக் காதையில், குழலாசிரியனுடைய அமைதி கூறு மிடத்துத் தெள்ளத் தெளிய உணர்த்தியுள்ளார்,

குழல் ஏறக்குறைய இருபது விரல் (ஒன்றேகால் அடி) நீளமும், நாலரை விரல் சுற்றளவும் கொண்டதாயிருக்க வேண்டும். வெங்கலத்தால் அணைசு செய்து இடமுகத்தை அடைத்து, வலமுகம் வெளியாக விடவேண்டும்.

இருபது விரல் நீளமுள்ள குழலிலே இரண்டு பக்கங்களி லும் இரண்டிரண்டு விரல் விட்டுத் துளைகளை அமைக்க வேண்டும். அணைசுக்குப் பக்கத்திலுள்ள துளை, வாய்வைத்து ஊதுவதற்குரியது. அத்துளைக்கு ஏழுவிரல் இடையிட்டு எஞ்சிய ஒன்பது விரலளவை எட்டுத் துளைகளுக்கு ஒரே அளவினதாக ஈடுபடுத்தவேண்டும். இந்த எட்டுத் துளை களுள் இறுதியிலுள்ள துளை முத்திரை என்று வழங்கப்

பெறும். நின்ற எழில் ஏழுவிரல்களை வைத்து ஊதுவார்கள். துளையின் அளவு நெல்லரிசியின் அளவாகும். இரண்டு துளை களுக்கு மிடையேயுள்ள அளவு ஒரு விரலாகும்.

குழல் இடையர்கள் வாழ்ந்துவந்த முல்லை நிலத்துக்குரிய தாயிற்று. அதன் இசை மாலைக்காலத்திற் குரியதுமாம். கணவரைப் பிரிந்து இருக்கும் மகளிர் மாலைக்காலத்தில் வருந் துவர். அவர்களுடைய வருத்தத்தை மிகுதிப்படுத்துவது ஆயர்களால் எழுப்பப்படும் குழலோசையேயாம். இந் நிகழ்ச்சியினைப்பற்றிச் சங்ககால நூல்கள் பல திறப்பட விளக்குவனவாம்.

மாலைக்காலம். கணவரைப் பிரிந்த ஒருத்தி மிக வருத்தத் துடன் நிற்கின்றாள். தென்றல் வீசுகிறது; அது அழலை வாரிக்கொட்டுவதாகக் கருதுகிறாள். இந்நிலையில் ஆயர்கள் தங்களுடைய குழலோசை கொண்டு ஆநிரைகளை ஒருங்கு சேர்க்கிறார்கள். தூரத்திலிருந்து வரும் அவ்வினிய வோசை அவளுக்கு மாலையென்னும் கொடியவனின் தூதாகிறது. அத்துடன் நின்றதா? இல்லை! வீட்டிற்கு நிரைகளை ஓட்டிக் கொண்டு வருகையில் ஒருவன் இனிமையாக ஊதி வருகிறான் குழலை. அந்தோ! அது அம்மங்கையர்க்கு இன்ப மூட்டிற்றில்லை. அவளுயிரைக் கொல்லும் மாலைக் காலமாகிய கூற்றுவனின் கொடிய படையாக விளங்குகின்றது. என்னே அவளுடைய துன்பம்! இதனைக் குறள்

"அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை"

என்று சுருங்கக் கூறுகிற்கும்.

மேலும், குழலோசையின் சிறப்பினைக் கண்ணன் வரலாற்றினாலும் அறியலாம். இத்துணைச் சிறப்பு வாய்ந்த குழல் தமிழகத்திற்கே உரிமையுடைய முதலாவதான இசைக் கருவி யாகும்.

செய்யுள் இலக்கணம்.

வித்துவான் திரு. ச. பாலசுந்தரம், அவர்கள்,
விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி.

(முற்றொடர்ச்சி, துணர் உகூ—மலர் சூ பக்கம் 159.)

[கலித்தாழிசை]

76. அடியள வில்லா தொத்தும் தனித்தும்
கடையடி மிகுதல் கலித்தா ழிசையே.

[கலித்துறை]

77. நெடிலடி நன்காய் நிகழ்வது கலித்துறை.

[கட்டளைக் கலித்துறை]

78. முதற்சீர் நான்கும் வெண்டளை பெற்றுக்
கடையொரு சீரும் விளங்கா யாகி
நேர்பதி னாறே நிரைபதி னேழெழுத்
தடிதொறும் வரினது கட்டளைக் கலித்துறை.

[கலிவிருத்தம்]

79. அளவடி நான்கின கலிவிருத்தம்மே.

[வஞ்சிப்பா இனம்]

[வஞ்சித்தாழிசை]

80. குறளடி நான்காய்க் குறையா தொருமூன்
றொருபொருள் மேல்வரின் வஞ்சித் தாழிசை.

[வஞ்சித்துறை]

81. குறளடி நான்கே துறையெனக் கூறுப.

[வஞ்சி விருத்தம்]

82. சிந்தடி நான்கின வஞ்சிவி ருத்தம்.

9. எச்சவியல்.

[சில செய்யுள் மரபுகள்]

83. வண்ணம் கூன்வனப்பு வகையுளி பொருள்கோள்
எண்ணிய விகாரம் அடிவரை இல்லன
மிறையும் பிறவும் நிறைவன கொளலே.

[வண்ணம் இதுவென்பது]

84. அவற்றுள்,

செய்யுளி னோசையிற் சிறப்புடன் பிறந்தே
எழுத்தினும் சொல்லினும் பொருளினும் இனிதாய்
வருவன எல்லாம் வண்ணம் என்ப.

[வண்ணத்தின் வகை]

85. பாஅவே தாஅவே வல்லிசை மெல்லிசை
இயைபே அளபெடை நெடுஞ்சீர் குறுஞ்சீர்
சித்திரம் நலிபே அகப்புறப் பாட்டே
ஒழுகே ஒரூஉவே எண்ணே அகைப்பே
தூங்கல் ஏந்தல் உருட்டே முடுகென
நாலைந் தாகவும் நடைபெறு மதுவே.

[அவற்றின் இயல்]

86. அவற்றுள்,

பாஅ வண்ணம் சொற்சீர்த் தாகி
நூற்பாற் பயிலும் நோக்கிற் றென்ப.

87. தாஅவே இடையிட் டெதுகைத் தாகும்.
88. வல்லிசை வண்ணம் வல்லெழுத்து மிகுமே.
89. மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே.
90. இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே.
91. அளபெடை வண்ணம் அளபெடை பயிலும்.
92. நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்.
93. குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப் பயிலும்.
94. சித்திர வண்ணம் இருமையும் பயிலும்.
95. நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்
96. அகப்பாட்டு வண்ணம் முடியாது முடியும்.
97. புறப்பாட்டு வண்ணம் முடிந்தும் முடியாது.
98. ஒழுகு வண்ணம் ஓசையின் ஒழுகும்.
99. ஒரூஉ வண்ணம் ஒரீஇத் தொடுக்கும்.
100. எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும்.

101. அகைப்பு வண்ணம் அறுத்தறுத் தொழுகும்.
102. தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்.
103. ஏந்தல் வண்ணம் ஒருசொற் சிறக்கும்.
104. உருட்டு வண்ணம் அராகந் தொடுக்கும்.
105. முடுகு வண்ணம் அடியிறந் தொழுகும்.

[கூன் இன்ன தென்பது]

106. செய்யுளின் கருத்தைச் சிறப்புடன் சுட்டி
அடிமுதல் நிற்பது கூனது வஞ்சியின்
இடையிலும் ஈற்றிலும் நிற்றலும் இயல்பே.

[வனப்பு வகை]

107. அம்மை யழகே தொன்மை தோல்விருந்
தியைபு புலனிழை யெனவனப் பெட்டே.

[அம்மை]

108. அவற்றுள்,
சின்மென் மொழியாற் சிலவடி புனைந்தாங்
கொண்பொருள் பயிறல் அம்மையென் றுரைப்ப.

[அழகு]

109. செய்யுண் மொழியாற் சிறப்புறு மழகே.

[தொன்மை]

110. உரையொடு புணர்ந்த பழைமையே தொன்மை.

[தோல்]

111. இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்
பரந்த மொழியான் அடிநிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிப தொன்மொழிப் புலவர்.

[விருந்து]

112. புதுவது கிளந்த யாப்பே விருந்து.

[இயைபு]

113. ஞகாரை முதலா னகாரை யீற்றுப்
புள்ளி யிறுதி இயைபெனப் படுமே.

[புலன்]

114. இயற்சொல் பயின்ற எளிமைய்து புலனே.

[இழைபு]

115. நாற்சீ ரடியே நான்கெழுத் தாதி
ஐந்நான் களவும் அடிதொறும் நிரம்பி
உயர்மொழி யான்வரின் இழைபென உரைப்ப.

[வகையுளி]

116. சொல்லையும் பொருளையும் நோக்கா தியலும்
சீர்தளை நோக்கிச் சிதைத்தல் வகையுளி.

[பொருள் கோள்]

117. யாற்றுநீர் நிரனிறை பூட்டுவில் தாப்பிசை
அடிமறி மொழிமாற் றளைமறிப் பாப்பே
கொண்டுகூட் டெனப்பொருள் கோள்வகை
[எட்டே.

[விகாரம்]

118. வலித்தலும் மெலித்தலும் நீட்டலும் குறுக்கலும்
விரித்தலும் தொகுத்தலும் விகாரம் என்ப.

119. ஒருமொழி மூவழிக் குறைதலும் அனைத்தே.

[அடிவரையில்லன]

120. பாட்டுரை நூலே மந்திரம் பிசியே
முதுசொல் அங்கதம் வாழ்த்தொடு பிறவும்
ஓரடி யானும் பலவடி யானும்
வருமவை யெல்லாம் அடிவரை யில்லன.

[பாட்டுரை]

121. அவற்றுள்,
பாட்டிடை மிடைந்தவும் காண்டிகை முதலா
நீட்டிய உரைகளும் பாட்டுரை யாகும்.

[நூல் இன்னதென்பது]

122. சூத்திரம் ஓத்துப் படலமென் றிவற்றுள்
அங்கா தகலா தரும்பொருள் சுட்டி
உத்தியோ டுரையகத் தடக்கிப் புரைதப
நுண்ணிதின் விளங்கல் நூலது பண்பே.

[நூல் வகை]

123. அதுவே,
முதலும் வழியுமென் றிருவகைத் தாகும்.

[முதனூல்]

124. அவற்றுள்,
வினையின் நீங்கி விளங்கிய அறிவவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்.

[வழி நூல்]

125. முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறித்
தொகைவகை விரியிற் றருடர்வது வழிநூல்.

[சூத்திரம் இன்னதென்பது]

126. அரும்பொருள் பலவும் ஆடியிற் செறிந்தாங்
கொண்மையொடு பொருந்தி உரையகத் தடக்கித்
திண்மையும் நுண்மையும் தெரிவுறப் புரைதப
சில்வகை எழுத்திற் றிகழ்வது சூத்திரம்.

[ஓத்து இன்னதென்பது]

127. ஓரினப் பொருள்தொகை ஓத்தென மொழிப.

[படலம் இன்னதென்பது]

128. பலபொருள் விரவித் தொடர்ந்திறின் படலம்.

[உத்தி இன்னதென்பது]

129. நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக் காட்டி
ஏற்புழி யறிந்திதற் கிவ்வகை யாமெனத்
தகும்வகை செலுத்துதல் தந்திர வுத்தி.

[உத்தியின் விரி]

130. ஒத்த காட்சி உத்திவகை விரிப்பின்
நுதலிப் புகுதல் ஓத்துமுறை வைப்பே
தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்
தானெடுத்து மொழிதல் பிறன்கோட் கூறல்
சொற்பொருள் விரித்தல் தொடர்ச்சொற் [புணர்த்தல்
முடிந்தது முடித்தல் உடம்பொடு புணர்த்தல்

இரட்டுற மொழிதல் ஏதுவின் முடித்தல்
முடித்துக் காட்டல் முடிவிடங் கூறல்
ஒப்பின் முடித்தல் மாட்டெறிந் தொழுகல்
இறந்தது விலக்கல் எதிரது போற்றல்
முன்மொழிந்து கோடல் பின்னது நிறுத்தல்
உரைத்தும் என்றல் உரைத்தாம் என்றல்
தலை தடுமாற்றே தந்துபுணர்ந் துரைத்தல்
தன்கோட் கூறல் ஒருதலை துணிதல்
இன்ன தல்ல திதுவென மொழிதல்
எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல்
பிறநூன் முடிந்தது தானுடம் படுதல்
சொல்லின் முடிவில் அப்பொருள் முடித்தல்
ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல்
மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின்
மொழியா ததனையும் முட்டின்று முடித்தல்
ஆணை கூறல் அதிகார முறையே
ஏற்புழிக் கோடல் உய்த்துணர வைப்பென
ஆறு றவையும் அன்னவும் என்ப.

[உரை இன்னதென்பது]

131. சூத்திரத் துட்பொருள் அன்றியும் யாப்புற
இன்றி யமையா திவைபவை எல்லாம்
ஒன்ற உரைப்பது உரையெனப் படுமே.

[குற்றம் இவை என்பது]

132. குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தல் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல்
சென்றுதேய்ந் திறுதல் நின்றுபயன் இன்மை
என்றிவை பிறவும் குற்றம் நூற்கே.

[மந்திரம்]

133. நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப.

[பிசி]

134. மொழிப்பொருள் கருதாது முன்னத் தியறலும்
ஒப்பின் இயறலும் பிசியென உரைப்ப.

[முதுமொழி]

135. நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்
மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளினை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப.

[அங்கதம்]

136. வெறுப்பினிற் பிறந்த வசையது வெளிப்படை
குறிப்பினிற் றேன்றிடின் அங்கத மென்ப.

[வாழ்த்து]

137. உவப்பினும் விருப்பினும் உரைப்பன வாழ்த்தே.

[மிறைக்கவி]

138. மாலை மாற்றே சக்கரம் சுழிகுளம்
ஏக பாதம் எழுகூற் றிருக்கை
காதை கரப்பே கரந்துறைச் செய்யுள்
கோமூத் திரியே கூட சதுக்கம்
ஒற்றுப் பெயர்த்தல் எழுத்து வருத்தனம்
சருப்பதோ பத்திரம் வினவுத் தரமே
என்றிவை பிறவும் மிறைக்கவி என்ப.

[செய்யுளியற் புறனடை]

139. கூறிய மரபிற் குறைந்தும் மிக்கும்
வருவன ஒப்பி வழுவின் நீக்கித்
தெரியக் கூறல் தெளிந்தோர் கடனே.

குறிப்பு :— இந்நூலுக்குரிய சிறப்புப் பாயிரமும், காண்டிகை யுரையும் பின்னர் வெளியிடப்பெறும். இதனைக் கண்ணுறும் தமிழறிஞர்கள் தங்கள் கருத்துக்களை அருள் கூர்ந்து தெரிவிக்க வேண்டுகிறேன்.

ஆசிரியர்.

சென்ற இதழில் செய்யுள் இலக்கணப் பிழை திருத்தம் எண்கள் நூற்பாவின் எண்கள்.

நூற்பா எண்.	வரி.	பிழை.	திருத்தம்.
4	தலைப்பு	அசைக்குறும்பாம்	ஆசைக்குறுப்பாம்
15	1	நாலாசைச்	நாலசைச்
31	தலைப்பு	பாவசை	பாவகை
41	தலைப்பு	ஆசிரியப்காவின்	ஆசிரியப்பாவின்
42	2	ஈற்றடி	ஈற்றயலடி
55	தலைப்பு	தாவினை	தாவிணை
57	தலைப்பு	கொச்சுகக்கலிப்பா	கொச்சகக்கலிப்பா
61	2	எட்டடீருக	எட்டீருக
96	1	அகப்பரட்டு	அகப்பாட்டு

வடவெல்லை தந்த வள்ளல்.

திரு. N. இராசகோபாலன்,
புலவர், மாணவர், கரந்தைப் புலவர் கல்லூரி.

அரசியல் வானில் மொழிவழி நாட்டுப்பிரிவினை என்னும் முன்னிருட்டுக் கவிந்து கொண்டிருந்த நேரத்தில் நம்பிக்கை ஒளியூட்டிக் கொண்டிருந்த சுடர் ஒன்று திடீரென அணைந்தது. ஆந்திரரின் பேராரவாரத்தால் அமுக்கிக்கிடந்த தீந்தேன் செந்தமிழைப் புத்துயிரளித்துப் புதுப்பண் மிழற்றிய யாழ் ஒடிந்துவிட்டது. நூற்றுக்கணக்கான நற்றமிழ் உள்ளங்களைத் தழுவித் துயர் துடைத்த கரம் மறைந்துவிட்டது. 31—8—53-ல் வந்த திங்களைத் தமிழர்கள் 'துயருட்டிய திங்கள்' என்று தம் வரலாற்றில் பொறிக்க வேண்டிய நாள். அன்றுதான் மாவீரர் 'மங்கலங்கிழார்' மறைந்தநாள். மங்கலங் கிழாரைப்பற்றித் தமிழுலகு யாங்கணும் தெரியாதிருப்பினும் சித்தூர்—வடஆர்க்காட்டுப் பகுதியில் அவரைப்பற்றி அறியாதார் ஒருசிலரே எனலாம்.

(வாழ்க்கை வரலாறு.)

சித்தூர் மாவட்டத்தில் புளிய மங்கலம் என்ற ஊரில் தோன்றிய அவர் சென்னையிலேயே இளமைப் பருவத்தைக் கழித்தார். தாய் மாமனால் ஆதரிக்கப்பட்டு வழக்கறிஞர் திரு. சேஷாசல அய்யரால் கல்வி புகட்டப்பட்டார். நளவெண்பா முதலாக சங்க நூற்கள் ஈறாக அனைத்தையும் அவரிடம் பாடங்கேட்டார். வ. உ. சி. யிடம் குறளும். திரு. வி. க. விடம் திருமந்திரமும், மறைமலையடிகள், திரு. கோ. வடிவேலு செட்டியார் ஆகிய இவர்களிடம் இலக்கணமும் பயின்றார். பின் புளியமங்கலம் மீண்டு, அங்கே மணியம் வேலையைப் பார்த்தார்.

'குப்புசாமி' என்பதனை இயற்பெயராக உடைய இவர் இராணிப்பேட்டை — சின்மயானந்த சுவாமிகள் என்பவரால் 'வித்தியானந்த சுவாமிகள்' என்ற பெயரளிக்கப்பட்டு அப்பெயரும் பின்பு கிருஷ்ணானந்த சுவாமிகள் என்பவரால் புறநானூற்று முறைப்படி 'மங்கலங்கிழார்' என்று மாற்றப் பட்டு கடைசி வரையிலும் இப் பெயரோடேயே நிலவலானார். சென்னையிலிருந்த போதே இவர் பிள்ளைகளுக்கு ஊதியமின்றிப் பாடம் கற்பித்தலை மேற்கொண்டிருந்தார். தம்மூர் வந்ததும் இரவில் அடுத்துள்ள ஊர்களுக்கு நடந்து சென்று அத்தொண்டினைப் புரிந்து வந்தார். சில காலம் சென்றதும் சமுதாயத்தைச் சீர்திருத்தி விழிப்பூட்ட வேண்டும் என்ற எண்ணம் வளர்ந்ததால் 'மணியம்' வேலையை உதறிவிட்டுப் பொதுத் தொண்டில் ஈடுபட்டுப், பலன் கருதாது பாடுபட்டு முடிவுவரை ஆக்கம் தேடினார்.

(சில குண நலன்கள்)

இவர் மூடப் பழக்கங்களை இளமையிலிருந்தே ஒழித்துக் கொண்டு வந்தார். எதையும் சிந்தித்த பின்புதான் நல்லதாயிருந்தால் நல்லதென்பார். இரவில் வெளியே செல்லுவதால் தன்னுடையவும் பிறருடையவும் வசதிக்காக 'பால்' ஒன்றையே உட்கொள்வார் நடிப்புத் துறையிலும் சிறந்திருந்தார். உடற்பயிற்சியால் எஃகு நரம்பும் ஏக்கழுத்தும் கிளர் ஈரலும் தடைபடா குருதியோட்டமும் கொண்டவர். நாநயம் வாய்ந்தவர். தமிழில் நிறைந்த புலமையுடையவர். சைவப்பற்றுடையவர்.

(தொண்டுகள்)

1. இவர் தமிழிளைஞர்களுக்குத் தெவிட்டாத தமிழை நாடோறும் புகட்டி வந்தார். படிப்பில் நாட்டமில்லாமல் இருந்து வந்த பாரிப்பாக்கம். திரு. அ. கண்ணப்ப முதலியார் போன்றவர்கள் இவரால் தூண்டப்பட்டே தமிழாசிரியர்களாக மாறியுள்ளனர். சேரிவாழ் தமிழர்க்குச் சிறப்பாக இவர் தொண்டு பயன்பட்டது.

2. 1911-ல் வடஆர்க்காடு மாவட்டத்திலிருந்து பிரிந்த ஆறு வட்டங்களைச் (1. திருத்தணி. 2. புத்தூர். 3. கங்குந் திருப்பம். 4. பலமனேரி. 5. வேங்கடம் உள்ளிட்ட சந்திரகிரி. 6. சித்தூர்.) சில தெலுங்கு வட்டங்களோடு சேர்த்து ஆட்சி எளிமைக்காக சித்தூர் மாவட்டம் என்று புதிய மாவட்டத்தை உண்டாக்கியபின் மங்கலங்கிழார் மாவட்டத்தில் வாழ்ந்து வந்த தமிழர்களுக்குத் தமிழ்நாடு பிரிக்கப்பட்டால் அதனில் இவ்வாறு வட்டங்களைச் சேர்க்கவேண்டிய காரணத்தையும் அவசியத்தையும் சுட்டி தூங்கினவர்களைத் தட்டி எழுப்பினர்.

3. ஆந்திரர் பேராசையால் அரிக்கப்படும் தமிழ் மொழியைச் சீர்தூக்க வேண்டி தமிழ் பயின்ற தொடக்கப் பள்ளி ஆசிரியர்களை எங்கும் பரப்ப பொதுட்டூர் பேட்டையில் பயிற்சிப் பள்ளியை நெருக்கடியான கட்டத்தில் திறந்து வைத்தார்.

4. அடிப்படைக் கல்வியில் தமிழ் போதிக்கப்படாத நிலையை நீக்கப் போராடி, புதுப்பேட்டையில் தெலுங்கு போதிக்கும் நடுத்தரப் பள்ளிக்கு எதிராக தமிழ் போதிக்கும் நடுத்தரப் பள்ளியை ஏற்படுத்தினர்.

5. ஆவணக் களரியில் தெலுங்கு மொழியில் வந்த பத்திரங்களையே ஆவணம் செய்யவேண்டும் என்றிருந்த இடர்ப்பாட்டை தமது நண்பரின் துணை கொண்டு தமிழ் மொழி ஆவணங்களையும் ஆவணம் செய்யப்பட உரிமை வாங்கி அளித்தார்.

(அறநெறித் தமிழ்ச் சங்கம்)

சிற்றூர்களில் ஆங்காங்கு தமிழ் மொழியைப் பரப்பவும் அரசியல் நிலையை எடுத்துக் கூறவும், சமுதாய பொதுப்பணிகளை நடத்திக் காட்டவும் வேண்டி அறநெறித் தமிழ்ச் சங்கங்களை நிறுவினர். இன்று அதற்கு 500 உறுப்பினர்ப்ள் உள்ளனர். ஆதரவாளர் மிகப்பலர். இதன் வழியாக முன்னேறிய புலவர்கள் பதின்மருக்கும் அதிகம்.

(அரசியலின் அவர் பங்கு)

ஆந்திரத்துக்கும் தமிழுக்கும் எல்லையான அப்பகுதியைச் சரியானபடி காக்கவும், முறைப்படி பிரிக்க உதவவும் ஒரு எல்லை ஆய்வுக் குழுவை ஏற்படுத்தினர். அதில் அவர் உறுப்பினராய் இருந்து பணியாற்றிக் கொண்டு வந்தார். பிரிந்த தமிழ் வட்டங்களை தமிழ்நாட்டுடன் சேர்க்கவேண்டும் என்ற குரலை முதன் முதல் முழக்கமிட்டவர் அவரே யாவார்.

(முடிவுரை)

'தமிழ்நாட்டின் விவேகானந்தர்' என்று ஒரு தலைவரால் இவர் புகழப்பட்ட போதிலும் சமுதாயத்தில் மட்டுமின்றி மொழிவளர்ச்சி, அரசியல் இரண்டிலும் துணையின்றித் தனியே தொண்டாற்றியவர் இவர் ஒருவரே யாவர் புகழையும் பொருளையும், விளம்பரத்தையும் வீண் ஆரவாரத்தையும் விரும்பாமல் உண்மையாகத் தொண்டு புரிந்த உயர்ந்தவர். உயிருடன் இருக்கும்போது போற்றாமல் பாரதியைப் போற்றுவதுபோல் இறந்தபின் இரக்கம் கொள்வதுதான் தமிழ்நாட்டின் வழக்கம் போலும்! தளர்ந்திருக்கும் திரு. வி. க. வையும் தெருவில் துரத்தி அவர் இறந்தபின் மணி மண்டபம் கட்டுவதுதான் பண்பாடு போலும்! அதனால்தான் மங்கலக்கிழார் உண்மைக்காக உழைத்துப் புகழைப் பார்க்காமல் இருந்தும் அவரைப் போற்றத் தவறியது போலும்! தமிழகம்.

இனியேனும் உயிருடன் இருக்கும் அறிஞர்க்குதவ இத் தமிழ் நாடு முன்வருமா? மங்கலங்கிழாரைப் போன்று புகழ் தேடாமல் தொண்டு புரிய தமிழர்கள் முன் வருவார்களா?

வாழ்க தமிழ்! வளர்க உண்மைத்தொண்டு!

பாவைப் பாவினியல்பு.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை B. A., B. L., தஞ்சை.

(முற்றொடர்ச்சி, துணர் உகூ—மலர் கூ—பக்கம் 154.)

நீராடப் புகும் ஒரு பாவையர், அன்னைக்கும் ஐயனுக்கும் பொது இயல் வழியாகவும், சிறப்பு இயல் மூலமாகவும் பின் வருமாறு பொருந்தப் பாடிக்கொண்டே 'நீரில் முழுகுவோம்' என்றனர். காதார் குண்டலங்களும், பைம் பூண்கலங்களும் கூந்தலிலுள்ள பூமாலையும் அதனில் மொய்க்கும் வண்டின் குழாமும் ஆடும்படியாக இக்குளிர்ந்த நீரில் ஆடி, திருச்சிற்றம் பலத்தையும், மறைப் பொருளையும், இறைவன் அப் பொருளாகும் வகையையும், சோதி வடிவான தன்மையும், இறைவனது கொன்றைப் பூ மாலையையும், இறைவன் ஆதியாகும் சிறப்பையும் அந்தமாகும் திறத்தையும், மலத்தைப் போக்கி உலகத்தினின்றும் வேறுபடுத்தி நம்மை வளர்த்தெடுத்த திரோதாயி எனும் சக்தியாகிய இறைவியின் திருவடித் திறத்தையும் பாடி நீராடுவோமாக.!

இதனைக் கேட்ட பிறிதொரு பாவையார் ஏனைய மாதர்களை முன்னிலைப் படுத்தி 'கச்சையும் பூணும் கொண்டு, தாய முதமாய் விளங்கும் சிறப்புடையீரே! தோழமை கொண்ட நம் நண்பியர் ஒவ்வொரு காலத்தும் இடைவிடாது, எம்பெருமானே! என்றென்று நம் பெருமானது புகழைப் பலமுறை பாடுவதில் வாய் ஓயமாட்டாள். மட்டற்ற மனக் களிப்புடன் சிந்தை நைந்து நம் பெருமான்பால் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க உருகுவாள். படிமீது விழுந்து பணிவாள். பிறிதொரு தேவரைப் பணியாள். பேரரையனுய எம்பெருமானிடம் பித்துக் கொண்டவர்கள் இவ்வண்ணம் ஆவார்களோ? இவ்வணம் செய்து ஆட்கொள்ளும் வித்தகர், இவரன்றி வேறு யாருளர்? அதனல் அத் திறத்தை யுடையாரது திருவடிகளை வாயார நாமெல்லோரும் பாடி அழகிய இறை போன்றிசைந்து தோன்றும் இம் மடுவில் பாய்ந்தாடுவோம்' என உள்ளங் குழைவுபடப் புகன்றாள்.

மற்றொரு மங்கைமார் இதனைக் கேட்டஞான்று, அருட் சத்தியினது கருணை வெள்ளத்து அருளை தாகமாய் நாடினார்க்குப் பெரிதும் பயன்படுமெனக் கருதி, பாவை நீராட்டு நோன்பில் உலகியல் நலமுறும்படி மழை பொழியுமாறு வேண்டுவாளாயினாள். என்னெனில் இறையருள் வழியாய மழையின்றி அமையாது சக்தி காரியமாகிய மாநிலமாகலின். 'மாமுகிலே! காலத்தால் முனைந்து கடல் நீரை முகந்து ஆகாயத்தின்கண் சென்று எம்மையெல்லாம் உடையாளாகிய எம்பிராட்டியைப் போன்று பசுமை அல்லது கருமை நிறமாகத் திகழ்ந்து, எம்மையாளுடையாளின் அணிகலனிட்ட சிறிய இடையைப்போல் மின்னி, எம்பிராட்டி திருவடிச் சிலம் பணியைப்போல் இடிமுழக்கம் செய்து இறைவியின் புருவம்போல் வளைந்த வானவில்லை விளக்கி, தன்னை என்றும் விட்டகலாத இறைவனுடைய அன்புடைத் தொண்டர்களுக்கு, அன்னார் உயிர் நலங் குறித்து முனைந்து வந்து, ஐயாறிரு அறமெலாம் வளர்க்கும் இறைவி கருணைமுகிலாய் இன்னருள் பொழிவதேபோல் நீயும் மன்னுயிர்த் தாரை போன்ற மழையைப் பொழிவாய்!

பிறிதொரு மங்கைமார் அம்மாதினை நோக்கி, அருட் சக்தி எளிதே இன்ப அருள் தரும் நன்றியை மறவாது நீரிற் படியப் பாடுவாளாயினாள். நறுமணம் செறிந்த கரிய கூந்தலையுடையாளே! இந்திரன் மாலயன் முதலிய வானோர்களிடத்தும், மற்றெங்கணுமிலாத ஒப்பற்ற பேரின்பம் நம்பால் உளதாகும்படி நம்மைப் பாராட்டி நமது இல்லங்களாய உள்ளங்கள் தோறும் எழுந்தருளி வந்து செந்தாமரை போன்றதும், பொன் போன்று பெறுதற்கரியதாய திருவடி ஞானச் செல்வத்தைத் தந்தருளும் அழகானந்த வீரனை, அலர்ந்த மெய்க் கருணை பொழியும் நோக்கமுடைய வேந்தனை, அடியேங்களாகிய எங்கட்கு அரிய அமுதை, எங்கள் பெம்மானைப் பாடி நலந்திகழ தாமரைத் தடாகத்தில் பாய்ந்து நீராடுவாய்!

மற்றும், கதிரவன் முளைத்தெழும் குறிப்பினை வெளிப் படுத்தும் முகத்தான், அம் மாதினையே விளித்து பின்னும் கூறுவாளாயினள். பெண்ணே! அண்ணா மலையானுடைய சோதி மயமான திருவடித் தாமரையை வணங்கும் வானவர் தம் முடியிலுள்ள ஒளிமணிகள் எவ்வாறு அச்சோதியின் முன் ஒளி கெட்டு மழுங்கியிருக்கின்றனவோ, அஃதே போன்று, ஞாயிற்றின் ஒளி பேரிருளைப் போக்கி விளங்க, விண்மீன் கூட்டங்கள் அக் கதிரொளியின்முன் தங்கள் ஒளி கெட்டு மறைய, இறையருட் பேற்றிற்குரிய இவ் வைகறைப் போதில், பெண்ணாகியும் ஆணாகியும், அலியாகியும், ஒளிமிக்க வானாகியும், மண்ணாகியும் இவற்றின் வேறாகியும் எங்கோமான் இருப்பினும், நாம் காணற்கினிய ஞான அமுதமாகி அவ் விறைவன் நின்றருள்கின்றான். இவ்வாறு நிற்கின்ற எம்பெரு மானுடைய திருவடியைப் பாடி காலந் தாழ்த்தாது இறையரு ளாகிய நீர் நிலையில் பாய்ந்து முழுகி இன்புறுவோம்!

இவ்வாறு மங்கைமார் ஒன்பதின் மரும் அன்பு நெறியில் நின்று இறைவன் திருவருளியக்கமின்றி யாதும் அமையா தென்பதை உணர்ந்தவராய் மார்கழி நீராடல் செய்து பூம் புனலை விட்டு வரும் அமயத்தில், எழுகின்ற கதிரவனைப் பார்த்து, ஆதியும் அந்தமுமிலா அரும்பெருஞ் சோதியினை அகத்தே நினைந்து, இச் செங்கதிரவன் கீழ்த்திசையில் அல்லது வேறு எத்திசையில் உதித்தால்தான் என்னே! கால தத்துவங் கடந்த சிவசித்தர்களாய யாங்கள் ஞான வினைகளை இயற்ற இறையருளால் எங்களுள் ஓங்காரமாய் நின்று ஒளி விட்டு விளங்கும் எழிலுடைய ஞாயிறு எமக்கே உரியதாகும். எங்களுக்கு இனி ஒருபோதும் அச்சமில்லை என்ற முருகிய உணர்வால் தம்முள் குழுமிக் கூறுபவராயினர்

உலகிற்கு உயிராகிய எம்மிறையே! நினது உடைமை யாகிய எங்களை எய்யாமற் காப்பது உமக்கே உரித்தாதலின், உமது கையிலுள்ள பிள்ளை உமக்கே அடைக்கலமென்றும்

பழமொழியை புதியதாக்கும் நாங்களும் நின்னைச் சார்ந்தவர்களே! எம்பெருமானே! எங்கள் அறியாமையால் எழும் அச்சத்தை அறிந்து ஒன்றுரைப்போம்! கேட்டருள்க. வினையுடலை எடுத்த எம்முயிர் தற்போத மொழிந்து சிவபோதமுற, நின் சேவடியினைக் கூடும் வண்ணம் நோக்கம் ஆடுங்கால், எமது ஊனுடல் நினது உணர்வுடைய அடியவரல்லாத மற்றவர்களுக்கு உரிமை பூண்டு பிறங்காதிருக்க. எங்கள் கரங்களோ உனக்கல்லாது வேறெந்த குற்றேவல்களும் செய்யாதிருக்க. அஃதா அன்றி அல்லும் பகலும் எமது கண்ணில் வரு மண்ணலது திருவடியினை யல்லாது யாதொரு பொருளினையும் காணாதிருத்தல் வேண்டும். எங்கள் தலைவா! இவற்றை எங்களுக்குத் திருவருள் புரிவாயேல், கீழ்த்திசையின்கண் தோன்று நின்ற இளஞாயிறு எத்திசையில் தோன்றினும், கால தத்துவங் கடந்த எங்களுக்கு என்ன பயமுளது? ஊனம் ஒன்றும் இல்லார்க்கு ஆட்பட்ட எங்களுக்குறும் தீங்கு யாதுமின்று!

அம்மையும் அப்பனு மியைந்தது போன்று தோற்றம் தரும் பொய்கையில் பாவை நோன்புடையார் நீராடிய பின்னர், அகக்கண் திறக்கப்படவே செம்மையாய உள்ளத்தின்கண் வீற்றிருக்கும் இறைவனது இணையடிகளைக் கண்டனர். சிவன் சேவடியினைத் தீர்த்தமாகு மென்பதைக் கண்டளவிலே, நீராடிப் போந்தார், திருவடி ஞானமுற்று, கழலினை வணங்க, இறைவனது திரள் தோள்களைக் கூடலாம், கூடி முயங்கி மயங்கி நின்று ஊடலாம். உணர்த்த, சிந்தையுள்ளும் செய்கையிலுள்ளும் உணர்ந்து உள்ளுருகலாம் எனத் தேறி, மார்கழி நீராடலுக்கு திருவருட் காப்பு திகழுமாறு, திருவடிப் பேற்றின் சிறப்பினையும் அத் திருவடியின் மாண்பினையும் பாரித் துரைப்பா ராயினர்.

எப்பொருளுக்கும் முதலாய நினது திருவடித் தாமரைகள் எங்களைக் காத்தருளப் போற்றுகின்றோம்! இறுதியாய் நின்ற சிவந்த தளிர்போன்ற நினது திருவடிகளைப் போற்று

கின்றோம்! அவைகளை எங்கட்கு அருளுக. இனி விஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர் எனப்படும் மூவகை உயிர்களுக்கும், இறை தன்னைக் காணற்கென வந்து வந்து பிறந்திடும் தெய்வங்கள் அனைத்திற்கும் தோற்றமும் போகமும் ஈறும் ஆகின்ற இரு திருவடிகளும் எங்களைக் காத்தருளப் போற்றுகின்றோம்! மற்றும் அயனும் மாலும் கீழும் மேலும் அகழப் பறந்தும் காணமாட்டாத செங்கமலப் போதாய திருவடிகள் எங்களைக் காத்தருள்க. இங்ஙனம் காண இயலாத திருவடிகள் பிறவியினைவேரறுத்து நம்மைப் பிழைத்திட அடிமை கொண்டருளும் பான்மையுடைய வாதலால், அவைகளை நாங்கள் போற்றுகின்றோம்! எங்களால் கொண்டாடப் பெறும் மார்கழி நீராடல் எனும் பாவை நோன்பினையும் அத்திருவடிகள் காத்தருளப் போற்றுகின்றோம்! என வருந்தி மாயப் பிறப்பறுக்கும் மன்னனடிகளையும் அவைகளின் அருட்செயல் ஐந்தினையும் வாழ்த்து வாராயினர்.

ஆணவ மூல மல மறைப்பால் அல்லலுற்ற உயிர்களுக்கு அறிவு வியாபகிக்கும் பொருட்டு இறைவன் உயிர்கள்பால் வைத்த கருணை, சக்திகளின் வாயிலாக உயிர்களுக்கு மாயா தனு கரண புவன போகங்களைக் காட்டி, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் (ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய், போக்குவாய் என்னை புகுவிப்பாய் —சிவபுராணம்) என்ற திருவைந் தொழில்களை இயற்றும் அருட்செயல் இவண் கூறப்பட்டது அறியப்பட்டது.

‘அழிப்பிளைப் பாற்றலாக்கம் அவ்வவர் கன்மமெல்லாம்
கழித்திடல் நுகரச் செய்தல் காப்பது கன்பலொப்பில்
தெழித்திடல் மலங்களெல்லா மறைப்பருள செய்திதானும்
பழிப்பொழி பந்தம்வீடு பார்த்திடினருளே யெல்லாம்’

என்ற அருமைத் திருவாக்கும் ஈண்டு நினைக்கற்பாற்று. மூல மலத்திற் கட்டுண்டு கிடக்கும் ஆன்மாவைக் கட்டறுத்துத் தொழிற்படுத்தி, அவ் வாற்றால், தம்பால் ஒன்று படுத்தும் ஆற்றலையுடைய இறையருட் செயலின் பெற்றியை பண்ணார் இனிய தமிழால் இத் திருவெம்பாவையை மனந் தழைத்து

உணர்த்திய மணிவாசகர், மனத்தைச் சிவயோக முறைகளால் ஒரு துறைப்படுத்தி, சிவானந்த ஊறலைப் பற்றிப் பருகும் பதமறியும் நிலையினை உய்த்துணர வைத்தார். இத் திருக்குறிப்பு, ஊனிலுள்ள உயிர்ப்பையினை, தவப் பகடியாட்டமின்றி ஒடுக்கி, ஞான விளக்கொளியினை மேலேற்றி சுழிமுனை (Spinal Cord) திறத்தல் வழி எளிதில் புலனாகும் என்பது ஊன்றியுணர்ந்து இன்புறற்பாலது. எனவே, திருவெம்பாவையின் உள்ளங் காண்டற்கு யோகப்புலமையும் வேண்டற்பாலதாதலின், அதனை யுணர்ந்து படிக்கும் யோகப் பயிற்சியுடையார், கண்ணினுள் மணியிலுள்ள பார்வையையும் மனத்தையும் ஒன்றுற்றுப் படுத்தியும், 'சேண் வயின் ஐம்புலன் செலவிடுத்தும்,' சிவதத்துவங்களில் அமிழ்ந்தும் முடிவில் சிற்சபையிலே (Cavernous Plexus) நடிக்கும் சிவன் வெளிப்படுதலைக் காண இயலும்.

மற்றும் உயிர், அறிவு இச்சை செயல் முதலிய வற்றைக் கொண்டு கன்மத்தோடும் மாயா காரியங்களோடும் கூடி பல உடலங்களை எடுத்தும் விடுத்தும் வருங்கால், பேற்றின் வயத்தால் இருவினை யொப்பும் மலபரிபாகமும், சத்திநிபாதமு மெய்தியவழி ஆதியாயும் அந்தமுமாய இறைவன், நீதியாய் நியமமாகி நின்று, ஐந்தொழிலியற்று முகத்தால், உயிர்த் தொகுதிகள் பாலுற்ற மும்மலப் பழவினை வன்மையைப் போக்கி, அறிவினாலே கூடிய உயிர்ச் சக்தி தன்னுருவடைய, எண் குணம் விளங்கும்படி துணைபுரிந்து பேரின்ப வாழ்வு நிலையினை அருள் செய்யும் திறமே இப்பாவைப் பாட்டினது திரண்ட பொருளாகும். எனவே மணிவாசகர் அருளிய திருவெம்பாவை இறைவன் திருவருட் பேற்றிற்கு இலக்காகிய கவிதையாய்க் கவினுற விளங்குதலும், வாழுமுயிரினங்கள் பேரின்பப் பெருவாழ்வும் பெற்று உள்ள மின்புறுதற்குப் பாங்கனாக விளங்கும் ஏதுவாய தெளிவும் செவ்வியும் பாவைப்பா ஒன்றிற்கே வாய்ந்திருப்பதும் கண்கூடாகும்.

(இ—வ)

கையறு நிலை.

கு. சிவமணி, IV (Hons), திருவள்ளுவர்விடுதி, அண்ணாமலைநகர்.

வாழ்வினிலே எளிமைதனைக் கடைப்பி டித்து
வையகத்தை உய்விக்கும் செயல்க ளுன்னைச்
சூழ்கையிலே அவற்றினிலே தூய்மை சேர்த்துச்
சூதற்ற உள்ளத்தால், இந்நாள் தன்னில்
பாழ்பட்டு நிற்கின்ற தமிழின் கண்ணீர்
பரிவுடனே மாற்றியதை ஏற்றம் செய்து
வாழ்விக்க வந்த திரு. வி. க,வே ! ஓ !
வாடுகின்றோம், நின்பிரிவு தன்னைக் கேட்டே !

எண்ணத்திற் கெட்டாத காலந் தொட்டே
எழில்பெற்றே ஒளிவிட்ட தமிழ கத்தில்
உண்ணுதற்கோ உணவின்றி உள்ளம் நொந்தே
உடையின்றித் தம்மெய்யைக் கையாற் போர்த்துக்
கண்ணீரைப் பெருக்குகிற மக்கள் வாழ்வைக்
காணுதற்குப் பொறுக்காது மனமே நொந்து
மண்ணுலக வாழ்வதனை நீத்தாய் போலும் !
மாண்புமிகு தமிழ்த்தாயின் தவப்பு தல்வ !

மாசில்லாத் தமிழ்ச்சுவையி லுள்ள மாழ்ந்தாய் !
மயக்கத்தால், தமிழென்று லந்த நாளில்
ஏசுகின்ற ஈனர்பலர் இருந்த சூழல்
எழுச்சிமிகக் கல்லூரி தன்னில் நல்ல
ஆசானாய்ப் பணியாற்றி இழிவு தன்னை
அகற்றுதற்கே அரும்பாடு பட்டாய் அந்தோ !
பேசுகின்ற பெருவாழ்வு பெறவே நாட்டுப்
பெருமைமிகத் தியாகத் தீக்குளித்தாய் போலும்!

வறுமையுறும் தமிழகத்தைப் பார்த்த போது
வருந்தியதை வாழ்விக்கும் வழிகள் காண

உரிமையுடன் தொழிலாளர் வாழ வேண்டி
உதறிவிட்டாய் பதவிதனை! ஒன்று சேர்த்தாய்.
சிறுமையுறும் பணியாளர் உன்னால் மிக்க
சிறப்புற்றா ரதைக்கண்டு மகிழ்ந்தா ரெல்லாம்!
பெருமைபெறும் தாய்க்குலத்தை விளங்க வைத்துப்
பெரியாரே! பிரிந்தாயே! அறிஞர் கோவே!

சமயத்தின் பெயராலே நாட்டிலெங்கும்
சமர்விளைக்கும் வீணரெலாம் வெள்க நன்மை!
அமைகின்ற வகையில்நல் லிசைப ரப்பும்
அன்புதனைத் தலையான கொள்கை யாக்கும்
சமரசசன் மார்க்கத்தி னெறியில் நின்று
சாந்தத்தின் தவமுருவாம் காந்தி யண்ணல்
தமதுவழி பற்றிமிகத் தமிழகத்தின்
தந்தையெனப் பலர்போற்றத் தவமே நோற்றாய்.

தென்றலெனத் தமிழ்நாட்டில் தவழ்ந்தாய் யெங்கும்
தீந்தமிழா மமுதத்தை அனைவ ருக்கும்
பொன்றுகின்ற பொழுதுவரைப் புலமை தோன்ற
போதித்தாய்! புகழ்கொண்டாய்! புலவ ரேறே!
உன்றனுடைக் கல்லறையி லின்று நாங்கள்
உரைக்கின்ற சூளிதுவே! தமிழ மக்கள்
குன்றாத நிறைவாழ்வு பெறவே எங்கள்
குருதியையே வேண்டிடினும் தருவோம் என்றே

கலைமலிந்த உள்ளத்தில் எழுந்த ஏடு!
காலமெலாம் அழியாத அழகு வீடு!
நிலையாக என்றுமொளி வீசும் நாளும்!
மலைபோல உனதுநினை வென்றும் வாழும்!
அலைபாயு முள்ளத்தா லெண்ணும் போது,
ஆற்றுவார் யாரெமக்கு? மாற்ற மேது?
குலையாத புகழுடனே குன்று போன்றே,
கொள்கையினு லென்றென்றும் வாழ்க நன்றே!

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

கலைமகள் விழா நிகழ்ச்சிகள்.

திருவள்ளுவர் யாண்டு 1984 புரட்டாசித் திங்கள் 28, 29, 30, ஆய மூன்று நாட்களிலும் விழா சிறப்பாக நடைபெற்றது.

முதல்நாள் 14—10—53, புதன்கிழமை மாலை 5 மணி யளவில் தஞ்சை மாவட்டத் துணைமன்ற முறைவலர் திரு. M. இராமையா பிள்ளை அவர்கள் B. A., B. L., தலைமையில் ஃகூடு கூட்டுறவுப் பயிற்சிப்பள்ளி விரிவுரையாளர் திரு. தியாகமோகன் அவர்கள் B. A., (HONS) 'தமிழர் கடமை' என்னும் பொருள்பற்றி அழகாகப் பேசினார்கள்.

இரண்டாம் நாள் 15—10—53 வியாழன் மாலை 5 மணி யளவில் ஆசிரியர் திரு. ந. மு. கோவிந்தராய நாட்டார் அவர்கள் B. A., L. T., தலைமையில் வீரராகவ உயர் நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் திரு. வித்துவான், R. ஏகாம்பர நாட்டார் அவர்கள் 'வருங்காலத் தமிழகம்' என்பது பற்றிச் சிறப்பாகப் பேசினார்கள்.

16—10—53 வெள்ளிக்கிழமை மாலை 6 மணி யளவில் தஞ்சை நாட்டாண்மைக் கழகத் துணைத் தலைவர் திரு, தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள், M. A., தலைமையில் குடந்தை அரசினர் கல்லூரித் தலைமைத் தமிழ் விரிவுரையாளர் திரு, Lieut. அ. கிருட்டினமூர்த்தி அவர்கள், (NCC.) M. A., B. L., B. O. L., (HONS) 'தமிழின் இளமைத்திறம்' என்னும் பொருள்பற்றி ஓர் அரிய ஆராய்ச்சி யுரையை நிகழ்த்தினார். விழாவிற்கு பெரும்பாலான அறிஞர்கள் வந்து சிறப்பித்தனர்.

தமிழின் இளமைத் திறம்,

16—10—53 வெள்ளிக்கிழமை கலைமகள் விழாவில் திரு. Lieut. கிருட்டின மூர்த்தி அவர்கள் (N. C. C.) B. A., B. L., M. O. L. (Hons.) பேசியதன் சுருக்கம்.

தமிழ் என்றும் தாழா இளமையுடைய தென்பது தமிழறிஞர் வரன் முறையாகக் கூறிவரும் செய்தியாகும். இதற்குப் பல சான்றுகளைக் கூறலாம். ஆனால் தமிழுக்கு அந்த இளமைத்திறம் எங்ஙனம் அமைந்தது? இதுதான் இப்போது விளக்கவேண்டிய செய்தியாகும். இதனை ஆயு முகத்தான், முதற்கண்ணே மொழியைப் பற்றிச் சில சிந்திப் போம். மக்கள் பேசுகின்றனர். அதுபோல விலங்கு, பறவை முதலிய உயிர் உள்ளனவும், கடல், சங்கு முதலிய உயிரில்லன வும் ஓசையை உண்டாக்குகின்றன. ஆனால் இவ்விரண்டற்கும் வேறுபாடுகள் உண்டு. மக்கள் எழுப்பும் ஒலிகளில் பெரும் பாலான வற்றிற்குப் பொருள் உண்டு. சிறுபான்மை பொரு ளில்லாமலும் நிகழும். விலங்கு முதலிய ஏனைய எழுப்பும் ஓசைகளில் பெரும்பாலான வற்றிற்குப் பொருளில்லை—சிறு பான்மை பொருளுண்டு. இதுவே, இவ்விரண்டற்கும் வேறு பாடாகும். ஆகவே நாம், ஓசை என்பதைப் பொருளில்லாதன என்ற அளவிலும், ஒலி என்பதை பொருளுடையன என்ற அளவிலும் பெரும்பான்மையான கருத்தில் பகுக்கலாம்.

இவ்வாறுக உள்ள மொழியானது இரண்டு அடிப்படை யில் நிகழ்கின்றது. முதலாவது பொருள்களைப் பற்றிக் கொண்டு ஒவ்வொரு மொழியிலும் வழங்கும் சொற்றொகுதி கள்; இன்னொன்று அச் சொற்றொகுதிகளை எங்ஙனம் ஆள் வது என்ற ஆட்சி முறையை உள்ளவாறு விளக்கும் இலக் கண நூற்கள் ஆகும். தனித்த முறையில் சொற்றொகுதி மட்டும் கொண்டு மொழி இயங்க முடியாது. அதே போல இலக்கணம் மட்டும் மொழியை இயக்க முடியாது. ஏனென் றால் இலக்கணம் என்பது மொழியை எங்ஙனம் ஆள்வது? அதன் இயல்பென்ன? என்ற அளவில் மட்டும் விளக்குவது.

இதன்பால் சொற்றொகுதிகள் இல்லை. சொற்றொகுதிகள் (அகராதி) ஒரொழுங்குபட்ட அளவில் சொற்களை விளக்குமே யல்லாமல், எங்ஙனம் ஆள்வதென்பதை விளக்க முடியாது. ஆகவே இவையிரண்டும் ஒன்றை ஒன்று பற்றி நின்று மொழியை இயக்குவிக்கின்றன என்பதை நாம் உணர வேண்டும்.

மொழி என்பது மனித சமுதாயத்தின் ஓர் அங்கமாகும். மனித சமுதாயத்தின் அவ்வக்கால இயல்புகள் மொழியின் கண்ணும் இடம்பெறும். மனித சமுதாயம் காலம், இடம், சூழ்நிலை முதலியவற்றிற் கேற்றாற்போல மாறும் இயல் புடையது. அதேபோல மொழிகளும் மாறும் இயல்புடை யனவாகவே நாம் கருதலாம். இதுவரையில் கூறிய செய்தி கள் மொழிகள் எல்லாவற்றிற்கும் பொதுவானதாகும். மொழிகள் மாற்றம் அடைவதில் உலகில் உள்ள ஏனைய மொழிகளோடு தமிழை ஒப்பிட்டுப் பார்த்தால் ஒருதலையாய வேறுபாட்டைக் காணலாம். ஏனைய மொழிகள் விரைவில் மாறும் இயல்புடையன. அந்த மாற்றத்தின் விரைவு, முந்திய மொழியைப் பின்னர் வாழ்வோர் புரிந்து கொள்ளாதவாறு வேறுபாட்டை மிகுவித்து விடுகின்றது. சாசர் காலத்து நூற்கள் இன்றுள்ள ஆங்கிலர் அறிந்துகொள்ள முடியாது. அவ்வளவு வேறுபட்டு விட்டது இன்றைய ஆங்கிலம். இந்த இயல்பை, தமிழோடு ஒத்த இனமான, மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலிய மொழிகளிலும் காணலாம். பலநூற் றாண்டுகட்கு முன்னர்ப் பேசிய தெலுங்கை இன்றுள்ள ஆந்திரர் அறியார். ஆனால் உலகின் மொழிகளில் காணப் படும் இந்த இயல்போடு தமிழை ஒத்திட்டுப் பார்த்தால் தமிழின் இளமைத்திறம் விளங்கும். தமிழ் விரைவான மாற்றத்தை ஏற்பதில்லை. விரைந்த மாறுதல் இதனுடைய இயல்புக்கு முற்றிலும் முரணானது. இந்த இயல்புதான் தமிழை, ஆரியம் போன்ற மொழிகள் வழக்கழிந் தொழிந்து போகவும், அழியா நிலைமையில் வைத்துள்ளதென்பதை நாம் தெளிவாக உணரவேண்டும்.

இன்று நமக்கு மிகவும் முற்பட்டதாக மொழியின் இயல்பை விளக்கும் நூலாக உள்ளது தொல்காப்பியமாகும். அது முதிர்ந்த இலக்கிய வழக்கையும் பேச்சு வழக்கையும் அழகுறக் காட்டுவது. அந்த தொல்காப்பியத்தில் வழக்கொழிந்த மொசகளை உரையாசிரியர்கள் எடுத்துச் சுட்டுவதைக் காண்கின்றோம். ஒரு மொழி வழக்கினின்றும் ஒழிய வேண்டுமானால், எவ்வளவுகாலம் ஆகும்? இதனை எண்ணிப் பார்ப்பின் தமிழின் தொன்மை விளங்கும். அதோடு இந்த மொழியான்து பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே திருத்தம் பெற்றதென்பதையும் நாம் உணரவேண்டும். மொழிக்கு முதலில் வரும் ஒலிகள், எழுத்துக்கள் இன்னவையென்றும், இறுதியில் வரும், ஒலிகள், எழுத்துக்கள் இன்னவையென்றும் வரையறுத்து ஒலிகளைத் தொல்காப்பியம் வரையறுத்துள்ளது. இதனை ஒட்டியேதான் பின்னுள்ளோரும் வற்புறுத்தியுள்ளனர். இந்த அளவில் நில்லாது இடையில் இன்னின்ன மெய்கள் இன்னின்ன மெய்களோடு மயங்கும் என்ற நிலையையும் காணுகின்றோம். இவ்வாறு தமிழ் இலக்கண நூலார் வகுத்துரைத்ததால் தமிழல்லாத வேற்றொலிகளை எளிதில் புரிந்துகொள்ள முடிகிறது. இடையில் மயங்கும் எழுத்துக்கள் மாறுபடும்போது, அச்சுக் கோப்பவன் கட்டை கொடுத்தும், சிதைத்தும் அச்சுக்கு ஒப்பனை செய்தல் போல, மொழியும் ஈறுபோதல், திரிதல் தோன்றுதல் இப்படியான பல விகாரங்களை அடைந்து இயலுகின்றன. இந்த வகையில் இலக்கண நூற்களின் பணியை, அரசாங்கம் பணத்தைக் கையாளும் முறையுடன் ஒப்பிடலாம். பணத்தை மிகுதியாக வெளியிடாமல் அதன் அளவைக் கட்டுப்படுத்துவதும், பழக்கத்திலிருந்து செல்லாதவற்றை செல்லாக் காசென விலக்குவதும் செய்கின்றனர். இதே போன்றுதான் இலக்கணமும் முன்னரேயே திருத்தமுற வரைந்த ஒன்றை வைத்து வரையறுத்துக் கூறுவதாகும். இக் கருத்துக்கு இன்னும் ஒரு எடுத்துக் காட்டாகப் பிள்ளைகளை வளர்க்கும் முறையைக் கூறலாம். பிள்ளைகளை இளம் வயதி

லேயே, அவர்கள் மனஞ் சென்றவழி செல்ல விடாது திருத்திப் படிக்க வைத்து நல்லொழுக்கமுடன் இருக்குமாறு கண்ணும் கருத்துமாகக் கவனித்து வளர்க்கின்றோம். இவ்வாறு வளர்க்கப்பட்ட குழந்தைகள், பின்னர் எதிர்காலத்தில் நல்ல புகழுடையவராக வாழ்கின்றனர். இதேபோல, மொழியும், இலக்கண ஆசிரியர்களால் நன்கு கண்காணிக்கப்பட்டுத் தமிழுக்கென்று அமைந்த இயல்புகளெல்லாம் சிதையாவாறு பேணிக் காக்கப்பட்டதால் தமிழ் இளமைத்திறம் உடையதாயிற்று.

அடுத்தபடியாக தமிழில் இன்னுமொரு இயல்பைக் காணுகின்றோம். அந்தக்காலத்தில் எந்த நூலையும் அரங்கேற்றிய பிறகுதான் எல்லோரும் ஒத்துக் கொண்டு அதனைப் போற்றிப் பயில்வது என்ற வழக்கம் உள்ளதாக அறிகின்றோம். அரங்கேற்றுதல் என்பது இன்று படங்களில் காணுவது போல அல்ல. இதனைக்கொண்டு அளவிட முடியாது அக்காலத்தில் பெரிய அரசர்களெல்லாம் தங்கள் பார்வையில் ஒரு அவை வைத்திருந்தனர். அந்த அவையில் கற்று வல்ல சிறந்த புலவர் தலைமையில் நூல்கள் அரங்கேற்றப்படும். அப்போது நூல் இயற்றியோன் தன்னுடைய நூலை அவையோருக்கு எடுத்து விளக்கிச் சொல்லுதல் வேண்டும். அவையிலுள்ளோர் நூலைப்பற்றி எழுப்பும் தடைகட்கெல்லாம் விடை கூறி விளக்குவது நூலாசிரியன் கடனாகும். இதனைத் தொல்காப்பியப் பாயிரம் விளக்குகின்றது. நிலந்தருதிருவிற் பாண்டியன் அவையத்தில், அதங்கோட்டாசான் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது என்பது அச் செய்தியாகும். களவியல் உரையிலும் இக் குறிப்புக் காணப்படுகிறது. இதனை இப்போதுள்ள Text Book Committee Approved Committee ஆகியவற்றோடு ஒப்பிடலாம்.

சிறு சொற்களைக் கூட நன்கு ஆருவியே ஒத்துக்கொண்டனரென்பது தெரிகின்றது. இதனை "துமி" என்ற சொல்லுக்காகக் கம்பருக்கும் மற்றவருக்கும் எழுந்த தடை விடைகளைக்

கொண்டு அறியலாம். இவ்வாறு அமைத்துக்கொண்ட அமைப்பும் தமிழின் இளமையைக் குன்றுமல் காத்தது என்று கூறலாம்.

அடுத்து சொற்களின் அமைப்பும் ஒரு காரணமாகும். எளிதாக வளைக்கவும், வெளிக்கவும், பிரிக்கவும் ஒலிகளைக் கோக்கவும் அமைந்துள்ளமையாகும். ஒலிகளெல்லாம் மிக எளிய முறையில் அமைந்துள்ளன. மனிதன் எளிமையாகப் பேசுமாறு அமைந்துள்ளது. மேலும் தமிழில் அமைந்துள்ள சொற்கள் தனித்தனி வேலைசெய்யும் உறுப்புக்களின் கூட்டமாக உள்ளன. அச்சுக்கோப்பவர் கோத்து மொழியாக அச்சேற்றிய பிறகு தனித்தனியே பிரித்து விடுகின்றார். சேர்க்கும் போதும் தனித்தனியே சேர்க்கின்றார். அதுபோல தமிழின் சொற்கள் தனித்தனியே வேலைசெய்யும், பகுதி, விகுதி, இடைநிலை சாரியை, சந்தி ஆய உறுப்புக்களால் இணைக்கப்பட்டு இயங்குகின்றது. வேண்டும்போது சேர்க்கலாம். வேண்டாத போது பிரித்துவிடலாம். இவ்வாறான ஒரு எளிய அமைப்பு தமிழுக்குமட்டும் எப்படி ஏற்பட்டது? இந்தக் கேள்வியை நாம் கேட்பதற்கில்லை. மனிதனின் உடம்பு ஏன் இப்படி அமைந்தது என்று கேட்க முடியாதவாறுபோல அமைந்த ஓர் இயற்கை அமைப்பென்று விடவேண்டியது தான்.

அடுத்தபடியாகச் சொல்லின் அடிப்படை அமைப்புக்கள் தமிழில் மாரு இயல்புடையனவாகவுள்ளன. வினைச்சொற்களில் வரும் பகுதிகளெல்லாம் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

(தொடரும்)

பண்டிதமணியாரின் மறைவு.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

தமிழகத்தே எண்முகத்தும் இன்பச் சிவமாகும் செந்தமிழின் அமுதத்தைச் சிந்தையில் மாந்தச் செய்யும் முதுபெரும் புலவர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், தமிழ் மக்களைச் செயலழிந்தும் மனமழிந்தும் ஆற்ருெணுத துயருறும்படி அகன்றதிறம், வன்னெஞ்ச மறலியினையும், தேறும் வகையறியாது திகைக்கச் செய்யும். பசும் பயிரைத் தாங்கி ஏகும் மழை, வானவில்லை அமைப்பதேபோன்று, பண்டிதமணியார், பல்லாற்ருன் மக்களுயிர்க்கு உறுதி பயக்க, இறைபால் நண்ணுவிக்கும் திருவாசகத்துக்கு கதிர்மணி விளக்க வுரையினை வழங்கிப்போந்தார். ஏனைய திருவாசகப் பகுதிகளுக்கு கதிர்மணி விளக்கம் காணுமாறில்லையென, நன்மணி யிழந்த நாகம்போல் துன்புறும் தமிழ் மக்கள் 'இருமையினும் பெறற்கரிய பண்டிதமணியை, என்று காண்பாம்! இனிக்காண்டல் எஞ்ஞான்று கூடுங்கொல்! என அலக்கணுற அரற்று வாராயினர். வீழும் விண்மீன் தன்னொளியை இழுத்தேகுவதால், அவர் பிரிவால், தமிழ் மக்களெய்தும் இழப்பின் எல்லையினை எவ்வகையானும் குறிப்பிட்டு உணர்த்துதல் சாலாது. எனினும் வீழும் வித்தே மரத்தின்கண் அரும்புவதேபோல், பிறப்பின் முளையினை இறப்பிலே காண்பர் அறிஞர். பொதுவகையான் இறப்பே பிறப்பாக வயங்கினும், இறையை, மணிவாசகர் 'எந்தையே!' என விளிக்கும் தத்துவத்தைத் தமிழறிவாகிய தவவறிவால் பண்டிதமணியார் உன்னி, 'தந்தையர் ஒப்பர் மக்கள்' எனும் முதுமொழிக்கிணக்கமாக, இறைபால் இயைந்தொழுகி விழுத்தகைமைபெற நிற்க, இறை, பண்டிதமணியாரை 'மண்மேல் யாக்கையினை விடுமாறும், மற்றும் தன்

கழற்கே புகுமாறும், பணித்தருளித் தன் கரத்தற் றொழி லின் கடைப்பிடியினைப் பூண்பாராயினர். தந்தையர் செல்வம், தனயற்குரிய தாதல்போல, இறைச் செல்வம் பெற்ற பண்டிதமணியின் புலமையின் மெஞ்ஞானப் பெற்றியினை இம் மண்ணுலகில் மறுப்பாரும் மறப்பாரு மிலராவர். இந் நிலையில் இக் கண்ணகல் ஞாலம், நேற்று ளார் இன்றிலார் என்ற நிலையாமையின் மிகுதிப் பெருமை யினை நெறிகோலிக் காட்டுகின்றது. இது கொண்டாவது வையத்துள் உயிர் கொடுத்து, உணர்வுப் பாழாகி சிறுமை யுறும் மக்கள் குலம், இனியாவது கிடைக்கப்பெற்ற கதிர் மணி விளக்கத் தெளிவால், வாழ்வாங்கு வாழும் நெறி யறிந்து, விண்முகத்தை வாழ்விக்க, பண்டிதமணியாரது நினைவை நிலைபெறுத்தும் கடமையினை மேற்கொளல் வேண்டும்.

★ யாழ் நூல். ★

பேராசிரியர் விபுலானந்த அடிகளார் பதினுன்காண்டு ஆராய்ந்து எழுதிய அரிய, சிறந்த இசை நூல்.

பொருள் பொதிந்தது தோற்றம் பொலிந்தது
விலை மலிந்தது.

மெல்லிய தாள்	தாள் உறை	15—0—0
	துணி உறை	18—0—0
தடித்த தாள்	தாள் உறை	18—0—0
	துணி உறை	20—0—0

அஞ்சல் செலவு வேறு.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை,

பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் அவர்கள் மறைவு.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வாழ்நாள் உறுப்பினரும், முதுபெரும் புலவரும் ஆகிய மகாமகோபாத்தியாய, பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் மகிபாலன் பட்டியில் தமது 73-வது ஆண்டில் (24—10—53) சனிக்கிழமை மாலை 5 மணியளவில் காலஞ் சென்றமை கேட்டு இக் கூட்டம் மிகவும்வருந்திப் பண்டிதமணி யவர்களதுபிரிவின் துயரால் வருந்தும் அவர்கள் குடும்பத்தாருடன் ஒக்கத் துயருழந்து ஆறுதலும் தெரிவிக்கின்றது. சிவநெறிச் செல்வராகிய பண்டிதமணியவர்கள் என்றும் சிவபெருமான் திருவடி நிழலில் அமர்ந்து தமிழகத்தாரையும் அவர்களின் வழித் தோன்றல்களையும் வாழ்விப்பாராக.

திரு. திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் பொருட்டு

ஆற்றொணாது கூறிய இரங்கல்.

மெ. வெ. வெ. வேலப்ப செட்டியார், பலவான்குடி.

கல்வி ஒழுக்கம் கரையில்லா நன்னோக்கம்
மல்கி வளமிகுந்த வாய்ப்பேச்சும்—ஒல்காத
நன்முயற்சி யன்னானை நாடிழந்த தென்பதல்லால்
என்னா தரவிருந்த திங்கு.

மறைந்தொளிர் மணிகள்.

வித்துவான் திரு. ச. பாலசுந்தரம், அவர்கள்,
விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி.

1. சொல்லால் எழுத்தானற் ருெண்டாற் றமிழகத்தைச்
செல்லல் களைந்த திரு. வி. க-வல்லதமிழ்த்
தாயரற்ற நின்று தமிழ்ப்புலவர் வாய்புலம்பப்
போய்மறைந்தாய் நிற்க புகழ்.

2. பெண்பெருமை பேசிப் பிறங்கு தமிழ்நாட்டைப்
பண்படுத்திப் பார்புகழ நின்ருய்யாம்-கண்பனிநீர்
தேங்கி யரற்றிடநீ சென்ருய் திரு. வி. க.
ஓங்கியகற் றேவருல கு.

3. ஆரியமும் செந்தமிழும் ஆழமுடன் நன்குணர்ந்து
பாரறிய நன்கு பகுத்துணர்த்துஞ்-சீரியசொல்
பண்டிதமா நன்மணியே பாவாழ் கதிரேச!
மண்டிசையால் வாழ்ந்தாய் மறைந்து,

4. அன்றவன்வாய் வாசகத்தைக் கேட்டேம் அதன்பொருளை
இன்றுன்வாய்க் கேட்பாம் எனவிழைந்து-நன்றியுடன்
தன்னுடு சேர்த்தானே தன்னேர் கதிரேசா!
தென்னுடு வாழ்வுறுமோ தேர்ந்து.

வித்துவான் சி. கோவிந்தராசன், விரிவுரையாளர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, கரந்தை.

செந்தமிழைப் புரந்ததமிழ் வேள் தனைமுன் சேர்த்தொளித்த செருக்கால்
பின்னும்,
பைந்தமிழ்க்கு அணிசெய்த சாமிநாதப் பாவலனைப் பரித்தார் மற்றும்,
அந்தமில்நல் லுரைகழறும் நாட்டாரோ டிராகவனை அழைத்தா ரந்தோ!
எந்தவகை பண்டிதநன் மணிநின்னை அழைத்தார்கள் இமையோர்
இன்னே!

தோற்றம் : விய, மார்கழி 5. மறைவு : விசய கார்த்திகை 21

தஞ்சை, கரந்தைக் கவியரசு,

திரு. அரங்க. வேங்கடாசலம் பிள்ளை

தேனார் தமிழ்அளித்த தெய்வத்தொல் காப்பியச்சொற்
காணா உரைவகுத்த ஆன்றபுகழ்ச்—சேனா
வரையனுரை வார்த்துரைத்த வள்ளால்! நீ சென்றாய்
திருவுறையும் நம்பனடி தேர்ந்து.

அவ்வேங்க டாசலமும் ஆர்வேங்க டாசலமும்
செவ்வே புகழுயாத் தொத்தாலும்—வெவ்வேறே
மால்தாங்கும் அம்மலையோ, மால்நீக்கும் செந்தமிழாம்
நூல்தாங்கும் இம்மலையோ நோற்று.